2016 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் புதிய கட்டடங்களைக் கட்டிக் கொடுத்தும், பழைய கட்டடங்களாக இருப்பதையெல்லாம் மாற்றி புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுத்தும், தமிழகத்தை ஒரு முன்னோடி மாநிலமாக உருவாக்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், நல்ல பதிலைச் சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

58—

கால்நடை மருத்துவமனை

***253—திரு. எச். வசந்தகுமார்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, சிவந்தியாபுரத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கண் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

புரட்சி என்ற வார்த்தைக்குப் பொருளாகவும், அந்தப் பொருளுக்கு உண்மையாகவும், அந்த உண்மைக்குப் பெருமையாகவும், அந்தப் பெருமைக்குப் புகழாகவும் விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விரலுக்கிடையே வித்தியாசம் பார்க்கும் வேண்டாதவர்கள் இருக்கும்போது, எல்லோரும் என் மக்களே என்று, சாதி, மத, இன, பேதம் பார்க்காமல், அனைவருக்கும் தூய ஆட்சி செய்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, சிவந்தியாபுரத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு, கால்நடை மருத்துவமனையை நேரடியாக ஆரம்பிக்க இயலாது. ஒரு பகுதியில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000—க்கும்மேல் இருப்பின், கால்நடைக் கிளை நிலையம்தான் முதலில் ஆரம்பிக்கப்படுகிறது. தகுதியின் அடிப்படையில், கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகவும், கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகவும் தரமுயர்த்தப்படுகிறது. என்றாலும், நாங்குநேரி தொகுதி, சிவந்தியாபுரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில், கால்நடைக் கிளை நிலையம் அமைக்கத் தேவையான கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000—க்கும் அதிகமாக உள்ளதால், சிவந்தியாபுரம் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவந்தியாபுரத்தில் ஏறத்தாழ 600 வீடுகள் இருக்கின்றன. அவர்கள் கால்நடைகளை நம்பித்தான் தங்களது வாழ்க்கையை செம்மைப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். தமிழக அரசு கொடுத்த விலையில்லா மாடுகளையும் சேர்த்து அங்கே ஏறத்தாழ 3,000—க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. பக்கத்திலுள்ள கிராமங்களிலும் அதிகமான கால்நடைகள் இருக்கின்றன. அந்த மக்கள் காலங்காலமாக கால்நடை வளர்ப்புத் தொழிலைச் செய்து வருகிறார்கள். எனவே, அந்தத் தொழிலை ஊக்குவிக்கின்ற வகையில், நமது தமிழக அரசு உடனடியாக ஒரு கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தருவதற்கு ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2016 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவந்தியாபுரம் மற்றும் பானான்குளம் கிராமங்களில் புதிய கால்நடைக் கிளை நிலையங்கள் அமைப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 8 ஆம் தேதி சேலத்திலிருந்து சென்னைக்கு வந்த சேலம்—சென்னை எக்ஸ்பிரஸ் இரயிலில்* Reserve Bank of India *பணம் கொள்ளையடிக்கப்பட்டிருக்கக்கூடிய செய்தியினால், இன்றைக்கு தமிழகத்திலே ஒரு பரபரப்பான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அரசு இந்த அவைக்கு என்ன விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறது என்பது குறித்து விவாதிக்க வேண்டுமென்று நான் தங்களிடத்திலே ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்குக் காலையில்தான் கொடுத்திருக்கிறீர்கள். காலை 9—40 மணிக்குத்தான் கொடுத்திருக்கிறீர்கள்.*